# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 20 மடல் 1 ஜனவரி 2020 ₹1.00

## துணைவேந்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

**அன்புள்ள வாசகர்களே!**

**என் இனிய, வளமான புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை** உங்கள் அனைவருக்கும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி, முன்னேற்றம், அமைதி மற்றும் நல்ல உடல் ஆரோக்கியத்தை வழங்கட்டும்.



'தானுவாஸ் பல்கலைக்கழகக் குழு' எப்போதும் முன்னணியில் இருப்பதையே வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. 2019ஆம் ஆண்டில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் நாம் அடைந்த குறிப்பிடத் தக்க மற்றும் அங்கீகரிக்கத் தக்க முன்னேற்றத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். பண்ணையாளர்கள், மாணவர்கள், பல்வேறு தரப்பினர் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் துறை சார்ந்தோர் பெருமகிழ்ச்சி அடையும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டத்தில் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ளது என்று அறிவித்துப் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். மேலும், நமது நாட்டில் முதன்முறையாக மாநிலப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட சிறிய கால்நடைப் பரிசோதனை வசதியுடன்கூடிய உயிர்ப் பாதுகாப்பு நிலை–3 (பிஎஸ்எல்–3) ஆய்வகத்தையும், "புரட்சித் தலைவி அம்மா அரங்கத்தையும்", சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்ட சிடி ஸ்கேன் வசதியையும் துவக்கிவைத்தார்கள். பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரிகளிலும் வழங்கப்படும் இளநிலைப் பட்ட மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகள் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை ஈர்த்து, அவர்கள் கல்வியில் சிறப்பிடம் பெற உதவியுள்ளன. பல்கலைக்கழகத்தின் 16 மாணவர்கள் 2018–19ஆம் ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகைக்கான தேர்வில் தேர்ச்சியடைந்தனர். மேலும், கால்நடை மருத்துவ அறிவியலில் முதுநிலைப் பட்டம் பயிலுவதற்காக இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நடத்திய நுழைவுத் தேர்விலும் அதிக எண்ணிக்கையிலான இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகைக்கான இடங்களைப் பெற்றதால் பல்கலைக்கழகத்திற்கு முதல் பரிசு அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் வசதிவாய்ப்புகளை அங்கீகரிக்கும் வகையில் அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் மற்றும் ஒக்லகாமா மாகாணப் பல்கலைக்கழகம், வங்காள தேசத்தின் சட்டோகிராம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த மொத்தம் 72 மாணவர்கள் சிகிச்சையியல் பாடங்கள் மற்றும் வெப்ப மண்டலக் கால்நடை நோய்கள் தொடர்பான பயிற்சி மேற்கொண்டனர். மாணவர்களின் நலன் சார்ந்த கற்றலை மேம்படுத்தும் வகையில் மொத்தம் ஐந்து செல்பேசி செயலிகள், 22 கற்பித்தல் கையேடுகள், ஒரு ஒளிஒலிப் பாடம் மற்றும் உடலியங்கியல் பாட மாதிரிகள் ஆகியவை உருவாக்கப்பட்டன. நமது நாட்டின் இளைஞர்களைப் பன்முகப்பட்ட மற்றும் பொறுப்புள்ள குடிமகனாக ஆக்குவதற்குரிய பண்புகள், ஒழுக்கம் மற்றும் கடின உழைப்பு இவற்றை ஏற்படுத்தும் வகையில் தஞ்சாவூர் தேசிய மாணவர் படையின் பிரிவு ஒன்று, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவக்கப்பட்டது. பல்கலைக்கழகம்மூலம் ஆலம்பாடி மாட்டினத்தைப் பாதுகாப்பதற்காகத் தருமபுரி மாவட்டத்தில் ஆலம்பாடி மாட்டின ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டது, தேசியக் கால்நடை மரபு வள அமைப்பிலிருந்து பர்கூர் எருமைமாட்டிற்கான அணுகல் எண் பெறப்பட்டது, புதிய ஜப்பானியக் காடை "தானுவாஸ் பியர்ல் காடை" உருவாக்கப்பட்டது மற்றும் தமிழ்நாடு மாநிலப் புதுமைத் திட்டத்தின்கீழ் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 13 ஏக்கர் பரப்பளவில் மூலிகைத் தோட்டம் உண்டாக்கப்பட்டது. விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு இல்லா இளைஞர்களின் மேம்பாட்டிற்கு உதவக்கூடிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தமிழ்நாடு அரசு சுய நிதிகளை அளித்து வருகிறது. இவ்வகையில் ஐந்து ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ரூபாய் 3,210.23 இலட்சம் அளித்துள்ளது.

கல்வி மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் முதன்மை பெறுவதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளுக்குத் தொடர்ந்து சேவை அளிப்பதும் பல்கலைக்கழகத்தின் முதன்மையான நோக்கமாகும். "தமிழ்நாட்டில் வெண்பன்றி வளர்ப்பின் தற்போதைய நிலை, சவால்கள் மற்றும் எதிர்காலச் சூழல்கள்" எனும் தலைப்பில் கோயம்புத்தூரில் நடத்தப்பட்ட மாநில அளவிலான இரு நாள் கருத்தரங்கு மற்றும் கண்காட்சியில் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. இராதாகிருஷ்ணன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி ஆகியோர் பங்கேற்றனர். மேலும், இக் கருத்தரங்கில் 300 விவசாயிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுடன் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலத்தில் புதிய வேளாண் ஆராய்ச்சி நிலையம் துவக்கப்பட்டு, விவசாயிகளுக்குப் பல்வேறு சேவைகள் அளிக்கப்படுகின்றன. கால்நடைப் பண்ணையாளர்கள் பயன் பெறும் வகையில் கால்நடை வளர்ப்புப் பயிற்சிகள், வெற்றிக் கதைகள், உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாகப் "பல்கலைக்கழகத்தின் சமூக ஊடகப் பிரிவு", வலையொளி (youtube) சமூக ஊடகத் தளத்தில் துவக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் முதன்மைத் திட்டமான விலையில்லாக் கறவை மாடு மற்றும் ஆடு வழங்கல் மற்றும் சிறப்புக் கோழி வளர்ப்புத் திட்டங்களின் பயனாளிகளுக்கு 309 பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டு, 32,326 பயனாளிகள் பயன்பெற்றனர். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மண்டலம் 10இல் சிறந்த வேளாண் அறிவியல் நிலையத்திற்கான "பண்டிட் தீன்தயாள் உபாத்யாய் ராஷ்டிர க்ருஷி விக்யான் புரோஷஹான் புரஸ்கார்" விருது –2018 மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பருவநிலை மாற்ற வேளாண்மை குறித்த தேசியத் திட்டத்தின் சிறந்த செயல்பாட்டிற்கான விருது ஆகியவற்றை நாமக்கல், வேளாண் அறிவியல் நிலையம் பெற்றுள்ளது. கால்நடைப் பராமரிப்பு தொடர்பான தொழில்களுக்குத் திறன்மிக்க மனித ஆற்றல்களை உருவாக்கி அளிக்கும் வகையில் பல்கலைக்கழகம் 15 செயல்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 10 சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகளை நடத்திவருகிறது. இந்தப் பயிற்சிகளில் 594 பேர் பதிவு செய்து பயிற்சிபெற்றனர்.

பல்கலைக்கழகத்தின் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளின் மருத்துவமனைகளிலும் மாதவரத்தில் உள்ள புறநகர் கால்நடை மருத்துவமனையிலும் உள்ள கால்நடை மருத்துவச் சிகிச்சை வசதிகள் இந்தியக் கால்நடை மருத்துவக் கழகத்தின் விதிகளுக்கு உட்பட்டு, நாட்டிலேயே சிறந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன. இம் மருத்துவமனைகளில் மாடுகள், எருமைகள், குதிரைகள், நாய்கள், பூனைகள், கோழிகள், வன விலங்குகள் ஆகியவற்றைச் சேர்த்து சுமார் 1.85 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. உள்நோயாளிப் பிரிவுகளில் 25,000 சிகிச்சைகள் செய்யப்பட்டன. நுண்ஒலி அலை வரைபடம் (அல்ட்ராசோனோகிராபி), உள்நோக்குக் கருவி (எண்டோ ஸ்கோபி), இதயத் துடிப்பலைப் பதிவுக்கருவி (இசிஜி), எலும்புமுறிவுச் சிகிச்சை, இரத்தக் கூழ்மப் பகுப்பு, கண் மருத்துவச் சிகிச்சை, தோல் நோய்ச் சிகிச்சை, நாய்களுக்கான இரத்த வங்கி ஆகிய உயர் சிகிச்சை வசதிகள் 17,489 கால்நடைகளுக்கு அளிக்கப்பட்டன மற்றும் 1,600க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிறப்பு அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டன. ஒரு புதிய முயற்சியாக, சிகிச்சையியல் இயக்ககம்மூலம் சிகிச்சையியல் முக்கியத்துவம் வாய்ந்த தலைப்பு குறித்து இணைய வழியிலான விரிவுரை நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடத்தப்படுகிறது. மேலும், உயிர்த் தொழில்நுட்பத் துறையின் நிதியுதவியில் செயல்படும் நாயின ஆராய்ச்சி மையத்திற்கு ஒரு இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு 2020 பிறந்திருக்கிற இவ்வேளையில் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் பிற தரப்பினர் அனைவரும் "தானுவாஸ் பல்கலைக்கழகக் குழுவில்" இணைந்து மிகவும் சாத்தியமான வழியில் வேளாண் சமூகத்தினருக்குப் பணியாற்ற கேட்டுக்கொள்கிறேன். "பல்கலைக்கழகக் குழுவின்" சார்பாக மீண்டும் உங்கள் அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, பல்கலைக்கழகக் குழுவிற்கு எப்பொழுதும் "விவசாயிகள் முதலிடம்" என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களுக்கு உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலான வாழ்த்துகளுடன்
முனைவர் சி. பாலச்சந்திரன்
துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை.

## பன்னாட்டுக் கருத்தரங்கு




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறையின் சார்பில் இந்தியக் கால்நடை இனப்பெருக்க ஆய்வுச் சங்கத்தின் 35ஆவது ஆண்டுக் கூட்டம் மற்றும் "விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவதற்கான நவீன இனப்பெருக்க நுட்பங்களின் மூலம் கால்நடைகளின் இனப்பெருக்கத்தினை மேம்படுத்துதல் பற்றிய உலகளாவிய பார்வை" எனும் பன்னாட்டுக் கருத்தரங்கு 18.12.2019 முதல் 20.12.2019 வரை நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 18.12.2019அன்று கருத்தரங்கைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். கர்நாடகக் கால்நடை மற்றும் மீன்வள அறிவியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் சுரேஷ் எஸ். ஹொன்னப்பகோல் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் சி. பாலசுப்பிரமணியன், இந்தியக் கால்நடை இனப்பெருக்க ஆய்வுச் சங்கத் தலைவர் முனைவர் வ. சந்திரசேகரமூர்த்தி மற்றும் பொதுச் செயலாளர் முனைவர் சிவ் பிரசாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவரும் கருத்தரங்கின் அமைப்பு செயலாளருமான முனைவர் ம. செல்வராஜு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவரும் கருத்தரங்கின் இணை அமைப்புச் செயலாளருமான முனைவர் இரா. இசக்கியல் நெப்பொலியன் அவர்கள் நன்றி கூறினார். இக்கருத்தரங்கில்

மொத்தம் 24 முதன்மை ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் 321 ஆய்வுச் சுருக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. மேலும் அமெரிக்காவைச் சார்ந்த முனைவர் லியோனல் ஜே தாசன், முனைவர் ராம் காசிமாணிக்கம், கனடாவைச் சார்ந்த முனைவர் ராஜ் துக்காவதி, மேற்கிந்திய தீவின் கிரினேடாவைச் சார்ந்த முனைவர் பிர்டோஸ் கான் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கில் மொத்தம் 324 அறிவியலாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர். 20.12.2019அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்துச் சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கினார். கோவை ஆப்டிமா பௌல்டரி பிரைவேட் லிமிடட் நிறுவன நிர்வாக இயக்குநர் மருத்துவர் கே.ஆர். குணசேகர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## தேசியப் பயிற்சி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை மருத்துவச் சிகிச்சை மற்றும் நோய்த் தீர்ப்பியல் துறையின் ஆசிரியர் உயர் பயிற்சி மையம் மூலம் “உடன் மற்றும் பண்ணை விலங்குகளில் இமேஜிங், நோய் கண்டறிதல் நுட்பங்கள் மற்றும் நோய்த் தீர்ப்பியல் உருவாக்கத் தொழில்நுட்பம்” குறித்த 21 நாள் தேசியப் பயிற்சி 27.11.2019 முதல் 17.12.2019 வரை நடத்தப்பட்டது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த 25 பேர் பயிற்சியில் பங்கேற்றனர். 17.12.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்துப் பயிற்சிக் கையேடு வெளியிட்டு, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். கால்நடை மருத்துவச் சிகிச்சை மற்றும் நோய்த் தீர்ப்பியல் துறையின் ஆசிரியர் உயர் பயிற்சி மைய இயக்குநர் முனைவர் எம்.ஜி. ஜெயதங்கராஜ் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

## உணர்திறன் பயிலரங்கு




பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு இயக்ககமும் புது தில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இந்திய வேளாண் புள்ளியியல் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து “தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டப் பகுதி – 2 பணிகள் மற்றும் பல்கலைக்கழகத்தில் கல்விசார் மேலாண் முறை நடைமுறைப்படுத்துதல்” குறித்த உணர்திறன் பயிலரங்கைச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.12.2019 மற்றும் 20.12.2019ஆம் தேதிகளில் நடத்தின. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் பயிலரங்கைத் துவக்கிவைத்துக் கல்விசார் மேலாண் முறை குறித்த பார்வைக் கையேடு வெளியிட்டார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் கன்னையன் பாண்டியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார். பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் பி. குமாரசாமி அவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்விசார் மேலாண் முறையின் தேவை குறித்துத் துவக்கவுரை ஆற்றினார். புது தில்லி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இந்திய வேளாண் புள்ளியியல் ஆராய்ச்சி நிலையத் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் முனைவர் ஆர்.சி. கோயல் அவர்கள் கல்விசார் மேலாண் முறை குறித்த முழுமையான தகவல்களை அளித்தார். பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரிகள் மற்றும் கல்விச் சிறப்புப் பிரிவுகளைச் சார்ந்த 80 பேர் பயிலரங்கில் பங்கேற்றனர். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ப. தங்கராஜ் அவர்கள் 20.12.2019அன்று நடைபெற்ற பயிலரங்கின் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, உரையாற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்த் தகவலியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. விஜயராணி அவர்கள் நன்றி கூறினார்.

## பயிலரங்கு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையால் “கால்நடை மருத்துவத்தில் ஆய்வகத் தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் விளக்கங்களின் பயன்பாடு” பற்றிய பயிலரங்கு, தமிழ்நாடு, கேரளா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களைச் சார்ந்த 11 கால்நடை மருத்துவர்களுக்கு 13.12.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார்.

## தொழில்நுட்பக் கூட்டம்

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையால் நாமக்கல் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறை மற்றும் பால்வளத் துறையைச் சார்ந்த கால்நடை மருத்துவர்களுக்குத் தொழில்நுட்பக் கூட்டம் 24.12.2019அன்று நடத்தப்பட்டது. இதில் 105 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர்.

## பண்ணையாளர் பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் திருநெல்வேலி, இலங்கை அகதிகள் மறுவாழ்வு அமைப்பும் இணைந்து “இறைச்சிக்கோழி வளர்ப்பு” குறித்த பயிற்சியை 12.12.2019 மற்றும் 13.12.2019ஆம் தேதிகளில் நடத்தின. திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் 13.12.2019அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்றுச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 24 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

➤ மாதவரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனையில் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மற்றும் தேசியக் கால்நடை இனப்பெருக்கத்



திட்ட நிதியுதவியுடன் ''மாடுகளுக்குச் செயற்கை முறைக் கருவூட்டல்'' குறித்த பயிற்சி, கிராமப்புற இளைஞர்களுக்கான பல்நோக்குச் செயற்கை முறைக் கருவூட்டல் தொழில்நுட்ப வல்லுநர் திட்டப் பயனாளிகளுக்கு 06.11.2019 முதல் 05.12.2019 வரை வழங்கப்பட்டது. திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைச் சார்ந்த மொத்தம் 25 கிராமப்புற இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்தார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றார். கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் அ. அருண்பிரசாத் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார்.

### பயிலரங்கு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நோய்த் தடுப்பு மருத்துவத் துறை மூலம் அஸ்காடு திட்டத்தின் கீழ் ''மாடுகளில் கன்றுவீச்சு நோயின் நிகழ்வாய்வியல் கண்காணிப்பு'' எனும் பயிலரங்கு, 05.12.2019அன்று நடத்தப்பட்டது. கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ் அவர்கள் பயிலரங்க நிறைவு விழாவில் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 60 கால்நடை உதவி மருத்துவர்கள் பயிற்சி பெற்றனர்.

### நபார்டு வங்கி நிதியுதவிப் பயிற்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நபார்டு வங்கியின் புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்வதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி, ''விவசாய நிலத்தில் அசோலா உற்பத்தித் தொழில்நுட்பங்கள்'' எனும் தலைப்பில் 17.12.2019 முதல் 19.12.2019வரை நடைபெற்றது. நபார்டு வங்கியின் திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திருமதி எப். சலிமா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். கல்லூரியின் கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வெ. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பயிற்சியின் நிறைவு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துச் சான்றிதழ் வழங்கினார். கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ். செந்தில்குமார் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். மொத்தம் 25 கால்நடைப் பண்ணையாளர்கள் பயன் பெற்றனர்.

### துணைவேந்தர் பங்கேற்பு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் திருச்சிராப்பள்ளி, இந்திய மேலாண்மை நிலையம்மூலம் 19.12.2019 மற்றும் 20.12.2019ஆம் தேதிகளில் உதகமண்டலம், ஆளுநர் மாளிகையில் நடத்தப்பட்ட ''பல்கலைக்கழக வேந்தரின் தொலைநோக்குப் பார்வை 2030: தொழில் யுகம் 4.0இல் புதிய கல்வி'' குறித்த உயர்கல்விக் கருத்தரங்கில் பங்கேற்றார். மாண்புமிகு தமிழக ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்தார்.

### வேளாண்மைக் கல்வி நாள்

✪ நமது நாட்டின் முதல் வேளாண்மை அமைச்சர் மற்றும் சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, வேளாண்மைக்



கல்வி நாள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 16.12.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்குக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.ஜான்கிருபாகரன் அவர்கள் தலைமை வகித்தார். டாக்டர் மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் முதன்மை அறிவியலாளர் முனைவர் என். பரசுராமன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, இளைஞர் மேம்பாடு குறித்து விரிவுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளில் பல்வேறு பள்ளிகளைச் சார்ந்த 25 மாணவர்கள் பங்கேற்றனர்.

✪ நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மைக் கல்வி நாள் 13.12.2019அன்று கொண்டாடப்பட்டது. இதில் 284 இளநிலைப் பட்ட மாணவர்கள்,



11 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 34 ஆசிரியர்கள் என மொத்தம் 329 பேர் பங்கேற்றனர். நிகழ்ச்சிக்குக்

கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை வகித்தார். பெரம்பலூர் மிட்வேலி டெய்ரி மற்றும் அக்ரோ லிமிடெட் நிறுவன மேலாளர் திரு ஞ. விஜயகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு "கால்நடைப் பண்ணையத்தில் உள்ள சவால்களும் எதிர்கொள்ளும் வழிமுறைகளும்" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

- ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டப் பிரிவால் வேளாண்மைக் கல்வி நாள் 03.12.2019அன்று கடைப்பிடிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஒரத்தநாடு அரசு உயர்நிலைப் பள்ளியின் 45 மாணவர்கள் பங்கேற்றனர்.

### இரத்ததான முகாம்



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் மாணவர் மன்றம் மற்றும் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவு ஆகியவை எச்டிஎப்சி வங்கி மற்றும் அரசு ஸ்டான்லி மருத்துவமனையுடன் இணைந்து டெங்கு மற்றும் பிற நோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு உதவும் வகையில் இரத்ததான முகாமைக் கல்லூரியில் 05.12.2019அன்று நடத்தின. தானமாகப் பெறப்பட்ட இரத்தம் சென்னை அயனாவரத்தில் உள்ள இஎஸ்ஐ மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, இரத்ததானம் செய்தோர்க்குச் சான்றிதழ் வழங்கினார். எச்டிஎப்சி வங்கியின் உதவித் துணைத் தலைவர் மற்றும் பிரிவுத் தலைவர் திரு. ஜி. சிவசங்கரன் அவர்கள் முகாமை ஒருங்கிணைத்தார். எழுபத்தொரு பேர் முகாமில் இரத்ததானம் செய்தனர்.

### செயல்முறைக் கற்றல் திட்டம்



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 2016–2017ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த இளநிலைப் பட்ட மாணவர்கள் 2019–2020ஆம் நிதியாண்டில் செயல்முறைக் கற்றல் திட்டங்களான தீவன உற்பத்தித் தொழில்நுட்பம், வணிக முறையிலான வெண்பன்றி வளர்த்தல் மற்றும் மதிப்புக் கூட்டிய பால் பொருள்கள் தயாரிப்புக்கான பால் பண்ணைத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல் ஆகிய மூன்று திட்டங்களில் பங்கேற்றனர். இதன்மூலம் பெற்ற நிகர இலாபத்தில் 75 விழுக்காடு இலாபத் தொகை மாணவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் 18.12.2019அன்று மாணவர்களுக்குப் பங்குத்தொகைக்கான காசோலை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்வில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பங்கேற்றார்.

### தொழில் நிறுவனம் / பண்ணை / தொழில்முனைவோர் பயிற்சி

பல்கலைக்கழகத்தின் ஒரு புதிய முயற்சியாக, தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட உதவியுடன் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரிகளையும் சார்ந்த 2015–16ஆம் ஆண்டு சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த இளநிலைப் பட்ட மாணவர்களுக்குத் தொழில் நிறுவனம் / பண்ணை / தொழில் முனைவோர் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள பல்வேறு தொழில் நிறுவனம் / பண்ணையில் 02.12.2019முதல் 13.12.2019 வரை மொத்தம் 51 மாணவர்கள் பயிற்சி பெற்றனர். இந்தப் புதிய முயற்சியில் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொழில் நிறுவனங்கள் / பண்ணைகள்: ஆப்டிமா கோழியினப் பாதுகாப்பு நிறுவனம், கோயம்புத்தூர், எஸ்கேஎன் கோழியினப் பாதுகாப்பு நிறுவனம், பெருந்துறை, இக்யூஸ் ஸ்டெட் ஃபார்ம், புனே, பிரதாப் ராசிமெண்ட் பிரைவேட் நிறுவனம், ஐதராபாத், குளோபியன் மருந்துப்பொருள்கள், ஐதராபாத், உயிர் அறிவியல் ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை, வனவிலங்கு எஸ்ஓஎஸ், பெங்களூரு, எஸ்கேஎஸ் செல்லப்பிராணிகள் மருத்துவமனை, சென்னை, தி ஆர்க் செல்லப்பிராணி மருத்துவமனை, சென்னை, திருமலா பால் பொருள்கள், சென்னை, ஏடிகே பால்பண்ணை, தேனி, முக்தேஸ்வர் ஸ்டெட் ஃபார்ம், சுக்லா செல்லப்பிராணி மருத்துவமனை, லக்னோ, அன்னை கோழித் தீனவங்கள் மற்றும் பண்ணைகள், திருநெல்வேலி.

### கால்நடை மருத்துவ உடற்செயலியல் வினாடி வினாப் போட்டி

இளநிலைப் பட்ட கால்நடை மருத்துவ மாணவர்களிடையே கல்லூரி அளவிலான கால்நடை மருத்துவ உடற்செயலியல் வினாடிவினாப் போட்டி, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 17.12.2019அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் போட்டியைத் துவக்கிவைத்தார். கல்லூரியின் இளநிலைப் பட்ட இரண்டாம் ஆண்டு மாணவர்கள் செல்வன் ஜி. மனோஜ்குமார் மற்றும் செல்வன் எஸ். ஹரிஹரன் ஆகியோர் வெற்றி பெற்றனர். மேலும், கர்நாடகாவின் பீதர் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 03.01.2020அன்று நடைபெற்ற தென்னிந்தியா அளவிலான கால்நடை உடற்செயலியல் வினாடி வினாப் போட்டியில் பங்கேற்று, நான்காம் இடம் பிடித்தனர்.

### காவலன் செயலி குறித்த விழிப்புணர்வு முகாம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதியில் உள்ள மாணவிகளுக்குக் காவலன் செயலி குறித்த விழிப்புணர்வு முகாம் 11.12.2019அன்று நடத்தப்பட்டது. முகாமில் சென்னைக் காவல் துறையின் வேப்பேரி காவல் நிலைய ஆய்வாளர் திரு. குணாளன் அவர்கள் கைபேசியில் காவலன் செயலியின் முக்கியத்துவத்தையும், அவசர காலத்தில் அந்தச் செயலி மூலமாகக் காவல் துறையினரை எவ்வாறு தொடர்புகொள்ள முடியும் என்பதையும் கலந்துரையாடல் மூலம் விளக்கிக் காட்டினார்.

### தேசிய மாணவர் படைப் பணி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தேசிய மாணவர் படையின் 2017–18 மற்றும் 2018–19ஆம் தொகுதிகளைச் சார்ந்த 25 தேசிய மாணவர்

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/05254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

படையினர் திருச்செங்கோடு, செங்குந்தர் கலை அறிவியல் கல்லூரியில் 28.11.2019 முதல் 07.12.2019 வரை நடைபெற்ற ஆண்டு பயிற்சி முகாமில் பங்கேற்றனர். மேலும், துப்பாக்கிப் பகுதிகளை ஒன்றிணைத்தல் மற்றும் பிரித்தல், பூப்பந்து, கைப்பந்து மற்றும் யோகா போட்டிகளில் பரிசுகள் வென்றனர். ஒட்டுமொத்தத் தேசிய மாணவர் படை விருதும் பெற்றனர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கு.சீனிவாசன் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 06.12.1959இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆதாரச் செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மருத்துவ மையத்தின் இளநிலை உதவியாளர் திரு. எஸ். பிரான்சிஸ் செல்வராஜ் அவர்கள் 30.11.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 21.11.1961இல் பிறந்த இவர் 6 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.




காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர் (தே.நி.) திரு. வி. மோகன் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 15.12.1961இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராயச்சி நிலைய விடுதியின் பணியாளர் திரு. பி. பெருமாள் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 23.12.1959இல் பிறந்த இவர் 29 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிதி அலுவலகப் பணியாளர் திரு. எம். ஜானகிராமன் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 01.01.1960இல் பிறந்த இவர் 26 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர் திரு. இ.சேகர் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 16.12.1959இல் பிறந்த இவர் 22 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலக அறிவியல் துறையின் பணியாளர் திரு. எஸ். தேவராஜன் அவர்கள் 31.12.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 10.12.1959இல் பிறந்த இவர் 13 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார் .

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா